மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் முதலிலேயே சொன்னேன். மக்கள் அதிகமாக அங்கே வருகிறார்கள் என்பதை நானே அங்கு ஒரு 2 மணி நேரம் உட்கார்ந்து பார்த்தேன். இப்போது தனியாகக் கட்டிடம் கட்ட, புதிய இடத்தைப் பார்த்துக் கொண்டிருக் கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தனி நபர்களிடம் வாங்குகிறபோது சேல்ஸ் டாக்ஸ் இல்லாது பில் போடச் சொல்கிறோம். சிறப்பு அங்காடியில் அது நடக்காது. ஆகவே இங்கே சிறப்பு அங்காடியில் சேல்ஸ் டாக்சுக்கு எக்சம்ஷன் கொடுத்தால் இன்னும் அதிக அளவுக்கு வியாபாரம் இருக் குமே, இதை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்த இலாக்கா என்னிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வி 468.

திரு. சோ. அழகர்சாமி : சார், நான் முன்பு இருந்தே கையை உயர்த்திக் கொண்டிருக்கிறேன். ஒரு கேள்வி போடக்கூட எனக்கு அனுமதி கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுப் பது என்பது இயலாத காரியம். வேண்டுமென்றால் கேள்வி நேரத்தை 1½ மணியாக அதிகப்படுத்துங்கள். இல்லையென்றால் எல்லாக் கேள்வி களும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றால், எல்லோருக்கும் துணைக் கேள்வி போட சந்தர்ப்பம் அளிப்பது முடியாத காரியம்.

பூங்கா நகர் கூட்டுறவு பண்டகசாலை.

* 468 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) சென்னை பூங்காநகர் "கூட்டுறவு மொத்த விற்பனை" பண்டகசாலை எப்போது துவக்கப்பட்டது?

(இ) 1970–71-ல் அதில் ஏற்பட்ட லாபத்தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) 1964-ம் ஆண்டில்.

(இ) 1970–71-ல் நட்டத்தில் இயங்கியது.

திரு. எம். சுரேந்திரன் : பூங்காநகர் மொத்த விற்பனை கூட்டுறவு பண்டகசாலையில் 40 லட்சம் நட்டம் வந்திருப்பதாகச் சொல்கிறார்களே, நட்டத்திற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை, குறைந்த சம்பளத்தில் வேலை செய்கிறவர்களது கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டிருக்கிறது என்பது உண்மைதானா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நட்டம் 40 லட்சம் இல்லை. 29 லட்சம் ஏற்பட்டிருக்கிறது. 1959-இல் இருந்து இந்த நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நிர்வாக அதிகாரிகள்மேல் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காரணம் 8 சதவிகிதம் தான் சம்பளம் கொடுக்கலாம். ஆனால் இங்கே 11 சதவிகிதம் வரை செலவழிக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகம் சரியில்லாத முறையில் இருந்த காரணத்தினால் அதை கோவை சிறப்பங்காடி நிர்வாக அமைப்போடு, புதிய நிர்வாகம் துவங்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இதில் வழக்குத் தொடர ஏன் இவ்வளவு காலதாமதம்? காலதாமதம் ஏற்பட்டால் வழக்குச் சிராக நடக்காது. ஏன் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : என்றைய தினம் ஆடிட் பண்ணி சீர்கேடு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த தினமே அந்த அதிகாரியின்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

லால்குடி கூட்டுறவு வேளாண்மை விற்பனைச் சங்கம்.

*469 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) லால்குடி கூட்டுறவு விவசாய மார்க்கெட்டிங் சங்க டைரக்டர்கள் போர்டு 1973 நவம்பர் மாதம் கலைக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) லால்குடி சிவஞானம் கூட்டுறவு வேளாண்மை விற்பனைச் சங்கக் குழு சங்க அலுவல்களை நடத்தியதில் முறைகேடுகள் காணப்பட்டதன் விளைவாக திருச்சிராப்பள்ளி, கூட்டுறவுச் சங்கங்களின் இணை இயக்குநரால் 1973 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இந்தக் குழு கலைக்கப்பட்டது. சங்க அலுவல்களில் இக்குழு கீழ்க்காணும் முக்கிய தவறுகளை இழைத்தது :—

(1) விற்பனையில் செய்த முறைகேடுகள் ;

(2) வெளிச்சந்தையில் உரங்கள் வாங்கியதில் முறைகேடுகள்.

(3) "ஆயில் எஞ்சின்கள்" விற்பனையில் முறைகேடுகள்.

(4) சங்கக் கட்டிட நிதியைத் தவருகப் பயன்படுத்தியமை.

(5) சங்கப் பொது நலநிதியைத் தவருகப் பயன்படுத்தியமை.